விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 230 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 20 திங்கட்கிழமை (05.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## சிங்கள வேட்பாளர்களை நம்ப நான் தயாரில்லை

### சி.வி விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(கொழும்பு)

சிங்கள வேட்பாளர்களை நம்ப முடியாது. ஜனாதிபதி ரணிலும் நம்பிக்கை துரோகியே என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத் 15

## மத்தியின் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு

### மட்டக்களப்பில் இயம்பினார் ரணில்

(மட்டக்களப்பு)

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிப்பதனூடாக மாகாண சபைகளைப் பலப்படுத்துவதே எமது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். 15



# நெஞ்சை உறைய வைத்த கொடூரம்

# பால் குடிக்காததால்

# குழந்தையைக் கொன்ற தாய்

## அளவெட்டியில் பயங்கரம்

*(யாழ்ப்பாணம்)* குழந்தை பால் குடிக்கவில்லை என்பதற்காகப் பெற்ற தாய் தன் குழந்தையைச் சித்திரவதை செய்து கொன்ற கொடூரச் சம்பவம் அளவெட்டியில் நடந்துள்ளது.

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## அரச பணியாளர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடத் தடை

### தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு



(கொழும்பு)

அரச பணியாளர்கள் தங்களது பணி நேரத்தில் தனிப்பட்ட சமூக வலைத்தள கணக்குகளிலோ அல்லது வேறு எந்தக் கணக்குகளையாவது பயன்படுத்தியோ அரசியல் கட்சி மற்றும் வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது பார பட்சம் காட்டுவது போன்ற 15

## உறுமய வேலைத்திட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

உறுமய காணி உறுதிப் பத்திர விநியோகம் உள்ளிட்ட வேலைத்திட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத் 15

## எல்லை தாண்டிய மீன்பிடி நேற்றும் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் கோவிலான் கலங்கரை விளக்க கடற்பரப்பில் கடற்படையினரும் கரையோரப் பாதுகாப்புப் பிரிவும் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது இந்திய மீன்பிடிப் படகொன்றும் கைப்பற்றப்பட்டுள் 15

## பிரதம நீதியரசருடன் கலந்துரையாடல் இல்லை

### சபாநாயகர் அறிவிப்பு



(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை எனவும் இந்த விடயம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடுவதற்கு சட்டரீதியான அடிப்படைகள் எதுவும் இல்லை எனவும் 15

## அரசாங்கத்திடம் தற்போது தனிப் பெரும்பான்மை இல்லை

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

அரசாங்கம் தற்போது தனிப் பெரும்பான்மையை இழந்துள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
19 - 10 - 1971

இறப்பு
04 - 08 - 2024

## திருமதி ரமணி வீரவாகு

தேனாவளவு, கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ரமணி வீரவாகு அவர்கள் நேற்று 04.08.2024 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் அமரர் பொன்னையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் வீரவாகு(யப்பான் வீட்டுக்கிளி) அவர்களின் அன்பு மனைவியும் மானிஸ்ஸா, மகிஷ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தினி, ஞானதாஸ், வதனி, யோகதாஸ், அமரர் சிவதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சரஸ்வதி, இராமநாதன், அமரர் குணரத்தினம் மற்றும் கனகரத்தினம், ராணி, தர்மரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.08.2024 திங்கட்கிழமை சாமியன் அரசடி, கரவெட்டி மத்தி கரவெட்டி இல்லத்தில் நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 634 6139
070 711 7111

தகவல்:
குடும்பத்தினர்

(C-930)



கிளிநொச்சி இரணைதீவு கடற்கரையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 207கிலோ கஞ்சாவை கடற்படையினர் மீட்டு முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இதேவேளை நேற்று முன்தினமும் 176கிலோ கஞ்சா வலைப்பாடு கடற்பகுதியில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (315,316)

## பால்...

மனித மனங்களை உறைய வைக்கும் இந்தக் கொடூரச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர் தனது ஒன்றரை மாதக் குழந்தை பால் குடித்த பின்னர் பேச்சு மூச்சற்றுக் கிடப்பதாகக் கூறி, அளவெட்டி வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (3) சனிக்கிழமை கொண்டு சென்றுள்ளார்.

குழந்தையை உடனடியாகத் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மாற்றியபோது, குழந்தை உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குழந்தையின் உடலில் காயங்கள் காணப்பட்டமையால், உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டதையடுத்து குழந்தையின் உடல் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அங்கு நேற்றைய தினம் (04) உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது, குழந்தையின் கை, கால்கள் முறிந்திருந்ததுடன் தலையில் காயங்களும் உடலில் கண்டல் காயங்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து குழந்தையின் மரணம் இயற்கை அல்ல என உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

இதையடுத்து திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மற்றும் பொலிஸார் குழந்தையின் தாயிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது, குழந்தை பால் குடிக்க மறுத்ததால் குழந்தையின் கை, கால்களைத் திருகினேன் என்றும் ஆனால் குழந்தையை நான் கொல்லவில்லை என்றும் தாயார் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து குழந்தையின் தாயாரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை பிரஸ்தாபத் தாய்க்கு இரண்டு வயதில் ஒரு பெண் குழந்தை இருப்பதாகவும் இது இரண்டாவது குழந்தை என்றும் தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க குழந்தையின் தந்தையையும் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

குழந்தையின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை உள்ளிட்டவை நீதிமன்றில் பாரப்படுத்திய பின்னர் நீதிமன்றின் உத்தரவின் பேரில் குழந்தையின் உடலை ஒப்படைப்பது தொடர்பில் முடிவு செய்யப்படுமென பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

# மரண அறிவித்தல்



மண்ணில்
01 - 09 - 1944

விண்ணில்
04 - 08 - 2024

## சின்னமோனே செல்வரட்ணம் (வெள்ளை)

கொக்குவில் பொற்பதியைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி செருக்கப்புலம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னமோனே செல்வரட்ணம் (வெள்ளை) அவர்கள் நேற்று (04.08.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னமோனே - சின்னாச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் வேலுச்சாமி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மகாந்தியின் பாசமிகு கணவரும் ஜெனரஜீவ்(சுவிஸ்), றோமியோ(பிரான்ஸ்), ஹம்சியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தையா, நடேசு, சண்முகலிங்கம், தர்மலிங்கம், தவமணி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் துர்க்கா, திவாகரன்(பிரான்ஸ்), உதயகீதன்(சண்முகா ரெக்ஸ்வெயார்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெகநாதன்(பெரியதம்பி), லோகநாதன்(குட்டி), பத்மநாதன், யோகன் ஆகியோரின் மைத்துனரும் சாரிக்கா, ருத்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2024) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 991 5880
076 182 2948

தகவல்:
குடும்பத்தினர்

(1625)

# கண்ணீர்க் காணிக்கை



தோற்றம்
02 - 03 - 1927

மறைவு
01 - 08 - 2024

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் பழைய வீதி கோப்பாய் தெற்கை வாழ்விடமாகவும் தற்போது கனடா மொன்றியலில் வசித்தவருமான

## அமரர் அன்னலட்சுமி பொன்னையா

அன்று தந்த அமுதவுணவு இன்றுமினிக்கிறது – அம்மம்மா
அகமகிழ்ந்து வாழ்ந்த காலம் என்றுமினித் திரும்பாது
உங்கள் முகம்பார்த்து உருகியழுவதற்கு எமக்கு
என்றும் வழியில்லை ஏங்குகின்றோம் இங்கிருந்து

அமரர் திருமதி அன்னலட்சுமி பொன்னையா (அம்மம்மா) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து எல்லாம் வல்ல தனிப்பனை வீரபத்திரப் பெருமானின் பாதக் கமலங்களில் உறைந்து பேரின்ப பெருவாழ்வு பெற பிரார்த்திக்கின்றோம்.

"மதுரம்"
பழைய துபாரத்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு.

பிரிவால் துயருறும்
திரு.திருமதி கிருபாகரன் முகுந்தா
குடும்பத்தினர்

(C-929)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை வங்கியின் 85 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் யாழ்.இலங்கை வங்கி ஸ்ரான்லி விதிக் கிளையில் கடந்த வியாழக்கிழமை முகாமையாளர் ஆர். இரட்ணராஜாவின் தலைமையின் கீழ் நடைபெற்றது. இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் கே. சிவஞான சுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். ஓய்வு நிலை வங்கிய திகாரி கே.கே.விக்னேஸ்வரன் வாழ்த்துரை வழங்கினார். மத குருமார்களும் , வங்கியாளர்களும், வாடிக்கையாளர்களும், ஓய்வூதிய வங்கியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கரைச்சி பிரதேச செயலக விளையாட்டு விழா

(அக்கராயன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடை யிலான விளையாட்டு விழா கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் நாளை 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்து


இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி)

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு பழைய மாணவர் களுக்கான கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மஹ் மூத் மண்டபத்தில் நடத்துவ தற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பழைய மாணவர் களுக்கான பொதுக் கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு ஒஸ்மானியா கல்லூரி அதிபர் என்.எம்.சாபி அழைப்பு விடுத்துள்ளார்.புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள் ளதாகவும் தெரிவித்தார். (நி)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமானது-மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையின் இடைவினைக் கழகம் மற்றும் கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை ஆகியவற்றுடன் இணைந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் வீதிப் போக்குவரத்துத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வை நடத்தியிருந்தது.

மேற்படி நிகழ்வில் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (படம்: சுபேசன்)


"பொன்னகவை காணும் தீபஜோதி"

கூவில்

# தீபஜோதி சனசமூக நிலையத்தின்

50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவினை முன்னிட்டு

தீபஜோதி விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும்

# மாபெரும் விளையாட்டுப் போட்டியும் கலை பண்பாட்டு பெருவிழாவும்- 2024

மூன்றாம் நாள் நிகழ்வு

"தீபஜோதி" பொன்விழா மலர் வெளியீடும்

பரிசளிப்பு வைபவமும்

காலம்: 05.08.2024 திங்கட்கிழமை

நேரம்: மாலை 5.00 மணி

இடம்: தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானம்



**தலைமை**

திரு. பொ. செல்வகிருஸ்ணன்

(தலைவர், தீபஜோதி சனசமூக நிலையம்)

**பிரதம விருந்தினர்**

உயர்திரு. மருதலிங்கம் பிரதீபன்

(அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு. சி. சத்தியசீலன்

(பிரதேச செயலர், பிரதேச செயலகம், பருத்தித்துறை)

கவிஞர் திரு. இ. த. ஜெயசீலன்

(பிரதேச செயலர், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி)

திரு. ப. தயானந்தன்

(உதவி பிரதேச செயலர், பிரதேச செயலகம், பருத்தித்துறை)

திரு. மா. நவநீதமணி

(ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை, தலைவர்-பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்)

**கௌரவ விருந்தினர்கள்**

திரு. இ. மண்டலேஸ்வர குருக்கள்

(பிரதமகுரு. சொக்கன்கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கூவில் கொட்டி ஞானவைரவர் ஆலயம்)

திரு. சிவ முகுந்தன்

(கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை)

திருமதி. சிவாஜினி கீதாஞ்சலன்

(கிராம அலுவலர் J/406, கற்கோவளம்)

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கள வாத்தியங்களுடன் விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- வரவேற்பு நடனம்- செல்வி . நிவேதா ஜெகதீஸ்வரன் (தீபஜோதி கல்விக்கழக மாணவி)
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- ஆசியுரை
- வரவேற்புரை
- தலைமையுரை
- பொன்விழா மலர் வெளியீடு
  - அறிமுகவுரை- திரு.செ.கபிலன் (தலைவர், தீபஜோதி கல்விக்கழகம்)
  - வெளியீட்டுரை-திரு.ப.பத்மகாந்தன் (தலைவர், பொன்விழா மலர்க்குழு)
  - மலர் வெளியீடு - முதற்பிரதி வழங்கல், சிறப்பு பிரதிகள் வழங்கல்
  - நூல் நயப்புரை- இலக்கியச் செம்மல் திரு.பரா.ரதீஸ் (அமைப்பாளர் அகில இலங்கை இளங்கோ கழகம், ஆசிரியர் யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- தீபஜோதி கல்விக்கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கல்விசார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வுகள்
  - பேச்சு
  - நாடகம் (கோவலன் கண்ணகி)
  - அறிவியல் விநாடி வினாப் போட்டி
- பரிசளிப்பு வைபவம்
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தீபஜோதி சனசமூக நிலையம்,
தீபஜோதி விளையாட்டுக் கழகம்,
தீபஜோதி முத்தமிழ் கலாமன்றம்,
தீபஜோதி கல்விக் கழகம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகள்
## இறுதிப் போட்டிக்கு முன்னேறிய ஜோகோவிச்



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில் மொத்தம் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர்.

இதில், டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸ் உடன் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் முதன்முறையாக ஒலிம்பிக் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.


அரையிறுதிப் போட்டியில் கனடா வீரர் பெலிக்ஸ் ஆகரை 6-1, 6-1 என்ற நேர் செட்களில் எளிதில் வென்று கார்லோஸ் அல்காரஸ் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார் மற்றொரு அரையிறுதி போட்டியில் இத்தாலியின் லோரென்சோ முசெட்டியை 6-4, 6-2, என்ற நேர் செட்களில் வென்று நோவக் ஜோகோவிச் இறுதிசுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

25 க்ராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஜோகோவிச் முதன் முறையாக ஒலிம்பிக் இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டியில் அல்கராஸிடம் நேர் செட்களில் ஜோகோவிச் தோல்வியடைந்தார்.

இந்நிலையில் ஒலிம்பிக் இறுதிப் போட்டியில் அல்காரஸை ஜோகோவிச் வெற்றி கொள்வாரா என டென்னிஸ் ரசிகர்கள் ஆர்வத்துடன் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# காயத்தால் தங்கத்தை தவறவிட்ட வீராங்கனை



பிரான்ஸ் தலை நகர் பாரிஸில் ஒலிம்பிக்போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில்மொத்தம் 200இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இந்நிலையில், பட்மிண்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீராங்கனையான கரோலினா மரின், சீன வீராங்கனை ஹி பிங்ஜியாவுடன் மோதினார்.

இதில் கரோலினா மரின் முதல் செட்டை 21-14என எளிதில் வென்றார். 2ஆவது செட்டில் 10-8முன்னிலை பெற்றிருந்தபோது மூட்டுவலியால் கடும் அவதிப்பட்டார். இதையடுத்து கண்ணீர் விட்டு கதறி அழுதார்.

இதையடுத்து, கரோலினா மரின் போட்டியில் இருந்து விலகினார். இதன்மூலம் ஹி பிங்ஜியாவ் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். (நி)




தனு




சானுகா




விக்னேஷ்




கவின்




கிரன்




கபிஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரவில் வைத்தியசாலை மகப்பேற்று விடுதி செயலிழப்பு

## இயங்க வைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி வேரவில் வைத்தியசாலையில் உள்ள மகப்பேற்று விடுதி இயங்குவதில்லை என பொது மக்கள் தெரிவித்தனர்.

இரு வைத்தியர்கள் பணியில் உள்ள போதிலும் ஒரு வைத்தியர் விடுப்பில் சென்றால் ஒரு வைத்தியரே பணியில் இருப்பார்.

கட்டட வளங்கள் உள்ள போதிலும் தாதியர்கள், மருத்துவ மாது என்பவர்கள் இவ் வைத்தியசாலையில் பணியில் இல்லாததன் காரணமாக மகப்பேறு விடுதி செயல் இழந்து காணப்படுகின்றது.

வேரவில் பிரதேச வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி இயங்குமானால் இவ் வைத்தியசாலையினை நம்பி வாழ்கின்ற 1000 வரையான குடும்பங்கள் பெரும் நன்மையடைவோம் என அவர்கள் தெரிவித்தனர். (நி-350)

# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிய தருகிறார். (நி)

# திறன் வகுப்பறை திறந்து வைப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் திறன் வகுப்பறை திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் அதிபர் ச.பூலோகராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி இராமசாமி கஜேந்திரா திறன் வகுப்பறையினை திறந்து வைத்தார். இந் நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-350)

1ம் ஆண்டு

# நினைவஞ்சலி



மனம் மகிழ 07.02.1952

மனம் துவள 16.08.2023

## அமரர் இராசையா சிவராசா

வருடமொன்று கடந்தாலும் வளையூர் பதியில் உதித்த
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே-அப்பா
குலம் தழைக்கும் காலம் வரை உங்கள் நினைவுகளோடு நீளும் எம்பயணம்
ஓராயிரம் ஆண்டுகள் ஓடோடி போனாலும் அன்பே சிவமான
எங்கள் தந்தையே என்றென்றும் எம் இதயங்களில்
அன்புத் தெய்வமாய் ஒளிர்வீர்கள்

பெரியகுளம், கண்டாவளை.

(c-926)

தகவல் : குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது வலயக் கல்வி அலுவலகத்தில் அலுவலகப் பணியாளராக கடமையாற்றிய

## அமரர். யோகலிங்கம் அருள்காந்



தோற்றம் 24.12.1991

மறைவு 01.08.2024

அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்புதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(224)

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி.

# இராசிபலன்

05.08.2024
ஆடி 20, திங்கட்கிழமை
பிரதமை முன்னிரவு 6.28 மணிவரை

ஆயிலியம் பிற்பகல் 4.29 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை

சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்

வளவன்

**மேஷம்** அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** பயணங்கள் மூலம் சுப செய்திகளைப் பெறுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிள்ளைகளால் சிறு விரயங்கள் ஏற்படலாம்.

**துலாம்** இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கௌரவமாக சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், தொழில் போட்டிகள் மாறும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** வேலைச்சுமை அதிகரிக்கும் வாய்ப்புண்டு, வரவை விட செலவுகள் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையால் சுப விரயங்கள் கூடும்.

**விருச்சிகம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** குடும்பத்தில் இருந்த மனஸ்தாபங்கள் அகலும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு.

**கன்னி** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள இடம்பெறலாம்.

**தனுசு** சுணங்கிய காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் மேலோங்கும் நாள், ரோக பயமுண்டு.

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் இன்று கைகூடும் வாய்ப்புண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

ஆயுளை நிர்ணயிப்பது செயல்கள் ஆண்டுகள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தொடர்பிலான மனித உரிமை மீறல்கள்;

# மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட நடவடிக்கை

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல்கள் குறித்து விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இக்காலப்பகுதியில் தேர்தல் சார்ந்த மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.**

அதன்படி, வாக்களிப்பதற்கும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களில் பங்கேற்பதற்கும் இலங்கை மக்கள் கொண்டிருக்கும் உரிமையை அங்கீகரிக்கும் அதேவேளை அவ்வுரிமைகள் குறிப்பாக தேர்தலுக்கு முன்னைய, தேர்தல் தினத்தன்று மற்றும் தேர்தலுக்குப் பின்னரான காலப் பகுதியில் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் தாம் சில விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பொலிஸாரும், அரச அதிகாரிகளும் நாட்டின் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து, அவர்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் முழுமையாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை மீள்வலியுறுத்தி அவர்களுக்கான விசேட வழிகாட்டல்களை ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அத்துடன், பொலிஸாரும், அரச அதிகாரிகளும் சட்டத்தின் பிரகாரம் சகல தரப்பினருக்கும் சமத்துவமான பாதுகாப்பை வழங்கவேண்டியது அவசியம் எனவும் எவ்வகையிலும் பக்கச்சார்பான நிலைப்பாட்டையோ, ஒடுக்குமுறை சிந்தனையையோ வெளிப்படுத்தக் கூடாது எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புபட்ட வகையில் இடம்பெறக்கூடிய மனித உரிமை மீறல்கள் குறித்து முறைப்பாடளிப்பதற்கான விசேட தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி 076 791 4695 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமோ அல்லது 011 2505 566 என்ற தொலைநகல் இலக்கத்தின் மூலமோ அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்ற மின்னஞ்சல் முகவரியின் மூலமோ தேர்தல் சார்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்க முடியும் என ஆணைக்குழுத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலும், பிராந்திய அலுவலகங்களிலும் இதற்கென சிறப்பு அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை கணிப்பது கடினமாக உள்ளது

### இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை கணிப்பது மிகவும் கடினமானதாகி வருகின்றது என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடேகி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.



இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை நாங்கள் ஆரம்பித்த காலம் முதல் அனைத்து அரசாங்கங்களுடனும் நாங்கள் சிறந்த உறவை கொண்டிருக்கின்றோம்.

எனினும் அனைத்தும் புதிய அரசாங்கத்தை பொறுத்தது. பொருளாதார கொள்கையில் தொடர்ச்சி பேணப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இலங்கை தான் ஏற்றுக்கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்த திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கை கைசாத்திடப்பட்டது.

ஜப்பான் மாத்திரமல்ல கடன்மறுசீரமைப்பிற்கு இணங்கிய ஏனைய அனைத்து நாடுகளும் இந்த அனுமானத்தின் அடிப்படையிலேயே அதற்கு ஆதரவளித்தன.

கொள்கையில் தொடர்ச்சி காணப்பட்டால் இலங்கை மக்களிற்கு மாத்திரமல்ல முதலீட்டாளர்களிற்கும் அதனால் நன்மை ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பெரமுனவில் அதிரடி மாற்றங்கள் நீக்கப்பட்ட முக்கிய பதவிகள்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி பாராளுமன்ற உறுப்பினர் எஸ் சந்திரசேன அநுராதபுரம் தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பதவிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.





இதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நீக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு பதிலாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த கம்பஹா மாவட்டத்தின் புதிய தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து அமைச்சர் காஞ்சன விஜேசேகர நீக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு பதிலாக பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க மாத்தறை மாவட்ட தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காலி மாவட்ட தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து அமைச்சர் ரமேஷ் பத்திரன நீக்கப்பட்டுள்ளதுடன், புதிய தொகுதி அமைப்பாளராக இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரிய தர்ஷன டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

## ரோஹித்தவும் ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அழைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன தீர்மானித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"மக்கள் விடுதலை முன்னணிக்கு இந்த நாட்டைக் கொடுப்பதா?, அல்லது காலை பேசுவதை மாலையே மறக்கும் சஜித்துக்கு 22 ஆம் திகதி இந்த நாட்டைக் கொடுப்பதா? இந்த வாய்ச்சொல் தலைவர்களுக்கு நாட்டைக் கொடுப்பதா? அல்லது நாட்டிற்காக ஒரு முடிவை எடுப்பதா?, எனவே நான் உங்கள் கருத்தைக் கேட்டு தலை வணங்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக்கும் வேலைத்திட்டத்திற்கு தயாராகி வருகிறேன்" எனத் தெரிவித்தார். (நி)

## தபால்மூல வாக்காளர் விண்ணப்பங்கள் ஏற்கும் பணி இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்காளர்களின் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை இன்றுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தபால்மூல வாக்காளர்களின் வசதிக்காக, வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

குறித்த விண்ணப்பதாரர்கள், இன்று 5 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குள் உரிய மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

அதன் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனையின்றி நிராகரிக்கப்படும் என தேர்தல் ஆணைக்கு தலைவர் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல தீவிரமாக முயற்சிக்கும் மக்கள்

**(கொழும்பு)**

**இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக வெளிநாடு செல்ல முற்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த 5 வருடங்களில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடு செல்லும் முயற்சிகள் அதிகரித்துள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 181 போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

எல்லை கண்காணிப்பு பிரிவின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வெளியிட்டு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 62 போலி ஆவணங்கள் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1992 - இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 20
உயரம் : 5'8"
தகைமை/தொழில்: A/L (TO)
எதிர்பார்ப்பு - பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: B/13374

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
5இல்சூரிசெவ்
உயரம் :5'6"
தகைமை/தொழில்:Bsc/QS
எதிர்பார்ப் பு: பட்டதாரி
தொ.இ: B/13490

பிறப்பு:1987-இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா:32
உயரம் :5'5"
தகைமை/தொழில்:BA, வாகனப் பயிற்றுவிப்பாளர்
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/8218

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1991 - RC
நட்சத் திரம் : பூராடம்
உயரம் : 157cm
தகைமை/தொழில்:MSC,BSC (Software Engineer), QA
எதிர்பார்ப்பு: Engineer, Doctor, IT,Degreeholder
தொ.இ: G/14163

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: -
உயரம் : 162cm
தகைமை/தொழில்: MBBS (Doctor)
எதிர்பார்ப்பு:சைவபோசனம்,பொறியியலாளர்
தொ.இ: G/14178

பிறப்பு -1995 - இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: - 43 1/4
உயரம் :5'1"
தகைமை/தொழில்:BBA (விரிவுரையாளர்)
எதிர்பார்ப் பு: அரச/ தனியார் தொழில்
தொ.இ: G/14184

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## அதிமதுரம்

**Botanical Name- Glycyrrhigaglabara**
**Family- Leguminosae**
**Eng- Liquorice**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இது இலங்கையில் வளரக்கூடிய பூகோள அமைப்பு இல்லை.

பல்லாண்டு வாழக் கூடிய செடி இனம். ஆனாலும் வேராக இந்தியாவிலிருந்து இறக்குமதியாகிறது. அதிமதுரம் என்பது மூலிகைச் செடியின் வேராகும். இவ் வேரானது இனிப்புச் சுவையாக இருப்பதால் அதிமதுரம் என அழைக்கப்படுகிறது.

எமது தமிழ் மருந்துக் கடைகளிலில் கிடைக்கும். அதிமதுர வேரானது நிறைய மருத்துவக் குணங்களைக் கொண்டது. அத்துடன் இது ஓர் காயகற்ப மூலிகையுமாகும். வயிற்றுப் புண்னை ஆற்றக்கூடியது. அத்துடன் அதில் ஏற்படும் தாபிதத்தையும் நீக்கக் கூடியது. பொதுவாக தோலை மென்மையாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்கக் கூடியது.

தோலில் சுருக்கம் ஏற்படுவதை தடுக்கக் கூடியது. அத்துடன் புற்று நோய்க் கலங்களின் வளர்ச்சியை தடுக்கக் கூடியது. சாதாரணமாக வாரத்தில் 3 நாட்கள் அதிமதுர தேநீர் பயன்படுத்தலாம்.

இதற்கு அதிமதுர வேரை நன்கு கழுவி தட்டி 200 மில்லி நீரில் 2 மணி நேரம் ஊறவைத்து அடுப்பேற்றி எரித்து 2 கொதி வந்ததும் இறக்கி இளஞ்சூடாக இருக்கும் போது அருந்திவர தொண்டை கரகரப்பு, வறட்டு இருமல் நீங்கும். அல்லது அதிமதுர வேரை நன்கு கழுவி வாயில் போட்டு மென்று கொண்டு வரும் போது அதன்



சாறு உமிழ்நீருடன் கலந்து தொண்டையில் பட்டுக் கொண்டு போகும் போது தொண்டை அழற்சி, இருமல் ஒன்றாக தணியும். இதே போன்று வயிற்றுப் புண்ணிற்கு அதிமதுர வேர்களை நன்றாக கழுவிய பின்பு ஒன்றிரண்டாக இடித்து 40 கிராம் அளவு 400 மில்லி நீரில் மூன்று மணி நேரம் ஊறவிட்டு பின்பு மிக்சியில் போட்டு இடித்து வரும் அதிமதுரப்பாலுடன், அதற்கு அளவான தேங்காய்ப் பால் சேர்த்து அடுப்பேற்றி கொதித்து கொண்டு வரும் போது 1/2 தேக்கரண்டி சுக்குப் பொடியும், ஏலக்காய் நான்கும் பொடித்து போட்டு 2,3 கொதி வந்ததும் சிறிதளவு பனை வெல்லம் சேர்த்து கரைந்து கொதித்ததும் இறக்கி இளம் சூடாக இருக்கம் போது 60-100 மில்லி அளவு தினமும் காலை குடித்து வர வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 60 நாட்கள் குடித்து வர வயிற்றுப் புண் நன்றாக குணமாகும். இதே போன்று வாய்ப்புண் இருந்தால் அதிமதுர வேர்களை நீர் விட்டு குடிநீர் காய்ச்சி அளவான சூட்டில் வாய் கொப்பளித்து வர வாய்ப் புண் ஆறும். ஈரல் நோய்களுக்கும் அதிமதுரம் சிறந்தது. இதற்கு அதிமதுர வேர்களுடன் இயங்கும் வேர்ப்பட்டை ஒரே அளவாக எடுத்து பொடித்து எலுமிச்சம்பழச்சாறு இட்டு அரைத்து 130 மில்லி கிராம் அளவு பசுப்பாலில் கலந்து தினமும் காலை [illegible] இதற்கு தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிடலாம். மன அழுத்தத்தை குறைக்கும் ஆற்றல் அதிமதுர வேருக்கு உண்டு. இதற்கு அதி மதுரவேர் 1 பங்கு என்றால் 1/4 நற்சீரகம் சேர்த்து உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் 1/2 தேக்கரண்டி அளவு காலை மாலை எடுத்து வர மன அழுத்தம் குறையும். மனஅழுத்தம் காரணமாகவும் வயிற்றுப்புண் ஏற்படலாம். எனவே அதிமதுர வேருக்கு மனஅழுத்தத்தையும் வயிற்றுப் புண்ணையும் நீக்கும் ஆற்றல் உண்டு. அதிமதுர வேரில் காணப்படும் வேதியற் பொருட்களாக glycyrrhizin, asporagin, phytosterol, oestrogen போன்ற முக்கிய வேதியற் பொருட்கள் காணப்படும். மேற்கூறிய நோய்களுக்கு பயன்படுத்துவதில் நவீன ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கவும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் ஹோர்மோன்களை சமநிலையில் வைத்திருக்க அதிமதுரம் உதவுகின்றது. முகத்தில் ஏற்படும் பருக்கள் கருவளையம் தோலில் ஏற்படும் சுருக்கத்தை நீக்க அதிமதுர வேரை நன்கு கழுவி உலர்த்தி பொடி செய்து அரித்து அதனுடன் எலும்பிச்சம் பழத் தோலை உலர்த்தி பொடித்து அரித்து அதனையும் சேர்த்து ரோஸ்வோட்டர் சிறிதளவு சேர்த்து பசையாக அரைத்து முகத்தில் பூசி இரண்டு மணி நேரம் ஊற விட்டு பின்பு நன்கு குளிர்ந்த நீரில் கழுவி வர முகத்தின் சுருக்கங்களை நீக்கி முகம் பளபளப்பாக வரும் அதிமதுர வேரில் antibacterical குணங்கள் அதிகம் இருப்பதால் தோலில் ஏற்படும் எக்ஸிமா போன்ற நோய்களுக்கு மிகவும் சிறந் தது. அத்துடன் அதிமதுர வேரில் அதிகளவு மருத்துவ குணங்கள் இருப்பதால் தீர்மானிக்கப்பட்ட அளவு தான் எடுக்க வேண்டும். எனவே சித்த மருத்துவரின் ஆலோசனையின் அடிப்படையில் குறிப்பிட்ட ஓரளவுக்கு பயன் படுத்த வேண்டும். dye powder இனை தற்காலத்தில் நிறைய பேர் பயன்படுத்துகிறார்கள். அதன் பக்க விளைவாக தோலில் pigm enttution போன்ற ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றது. இதற்கு அதிமதுர வேர் பொடியுடன் கற்றாழைச் சோறு சேர்த்து பச்சையாக அரைத்து அவ்விடங்களில் பூசிவர படிப்படியாக தோல் சாதாரண நிலைமைக்கு வரக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# தந்தையின் கவனமின்மையால் காருக்குள் இறந்த குழந்தை

(வோஷிங்டன்)

தந்தை வீடியோ கேமில் மூழ்கிய நிலையில் காருக்குள் வெப்பத்தில் துடிதுடித்து 2 வயது குழந்தை உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.


முந்தைய காலத்தில் ஒரு வீட்டில் 10 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தனர். அப்போது கூட பெற்றோர் குழந்தைகளை பார்த்து பார்த்து வளர்த்தனர். தற்போதைய காலத்தில் ஒரு வீட்டில் 2 குழந்தைகள் தான் உள்ளனர். ஆனால் பெற்றோர் குழந்தைகள் மீது கவனம் செலுத்தாமல் வேலை மற்றும் மொபைல் போன் உள்ளிட்டவற்றில் மூழ்கிப்போகியுள்ளனர்.

பெற்றோர் அஜாக்கிரதையால் ஆழ்துளை கிணறு உள்ளிட்டவற்றில் குழந்தைகள் உயிரிழக்கும் சம்பவம் அதிகம் நடக்கின்றன.

அந்தவகையில் அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் உள்ள நகர்ப்புற பகுதி ஒன்றில் வெளியில் சென்றிருந்த தாய் வீட்டுக்கு வந்து பார்த்த போது காரில் அவரது குழந்தை மூச்சுப் பேச்சின்றி கிடந்துள்ளது. குழந்தையை மீட்டு தாய் மருத்துவமனைக்கு சென்றார். அப்போது குழந்தை உயிரிழந்து விட்டது என வைத்தியர்கள் தெரிவித்தனர். குழந்தை 42.7 டிகிரி செல்சியஸ் வெப்பத்தால், துடிதுடித்து உயிரிழந்தது தெரியவந்தது.

குழந்தையின் தந்தை வீட்டின் முன் காரை நிறுத்தி விட்டு சென்றுள்ளார். குழந்தையை காரில் விட்டுவிட்டு வீட்டுக்குள் சென்றவர் மறந்தபடி வீடியோ கேமில் மூழ்கியுள்ளார். காரில் 3 மணி நேரத்திற்கு மேலாக, ஏசி ஓடாத நிலையில் குழந்தை வெப்பத்தில் துடிதுடித்து உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# மீண்டும் முதலிடத்தை தக்க வைத்தார் மோடி



(டில்லி)

உலக அளவில் புகழ் பெற்ற தலைவர்கள் குறித்த கருத்துக்கணிப்பில் இந்திய பிரதமர் நரேந்திரமோடி மீண்டும் முதலிடத்தைப் பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த தகவலை மோர்னிங் கன்சல்ட் என்ற நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்தவகையில் குறித்த நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் 69 சதவீத ஆதரவுடன் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் முதலிடத்தைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

இவரைத்தொடர்ந்து, மெக்சிகோ ஜனாதிபதி ஆன்ட்ரஸ் மானுவேல் லோபஸ் 63 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்திலும் அர்ஜென்டினா ஜனாதிபதி ஜாவிர் மிலே 60 சதவீதம் பேர் 3ஆம் இடத்திலும் உள்ளனர்.

இந்தநிலையில் கடந்த ஆண்டும் இந்திய பிரதமர் மோடி முதலிடத்தில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# இஸ்ரேலை தடுத்து நிறுத்தாவிட்டால் உலகத்திற்கு ஆபத்து-எச்சரிக்கும் ஈரான்



(டெஹ்ரான்)

இஸ்ரேலை தடுத்து நிறுத்தாவிட்டால் உலகத்திற்கு பெரும் ஆபத்து ஏற்படும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டதையடுத்து இஸ்ரேலை பழிவாங்குவோம் என ஈரான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேலை தடுத்து நிறுத்தாவிட்டால் மத்திய கிழக்கு பகுதி மட்டுமின்றி, உலகத்திற்கே ஆபத்து என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அலி பாகரி கனி எச்சரித்துள்ளதுடன் கடந்த பத்து மாதங்களில், இஸ்ரேல் - காசா பகுதியில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளதாகவும் இப்போது இஸ்ரேலின் குற்றங்கள் பெய்ரூட், டெஹ்ரான் மற்றும் ஏமன் வரை விரிந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் மீண்டும் தொடங்கியது ஹிஸ்புல்லா

(பெய்ரூட்)

இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் ரொக்கெட் தாக்குதல் நடத்தியதால் மத்தியக்கிழக்கில் பதற்றம் அதிகரித்துள்ளது

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக பாலஸ்தீனத்தின் முக்கிய நகரமான காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பாலஸ்தீன மக்களுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் ஆதரவாக அண்டை நாடான லெபனானில் இருக்கும் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தச்சூழலில் ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரானில் படுகொலை செய்யப்பட்டார்., இவரது படுகொலைக்கு இஸ்ரேல் தான் காரணம் என்று ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டி வருகிறது.


எனவே இஸ்மாயில் ஹனியே கொலைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரான் தரப்பில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் இஸ்ரேல் மீது எந்த நேரத்திலும் ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் போர் பதற்றம் காரணமாக லெபனானில் இருக்கும் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களை, உடனடியாக வெளியேறுமாறு அந்தந்த நாடுகள் அறிவுறுத்தியுள்ளன.

இந்த நிலையில் இஸ்ரேலின் பெய்ட் ஹிலால் நகரத்தை குறி வைத்து ஹிஸ்புல்லா அமைப்பு ரொக்கெட் தாக்குதல் நடத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தங்கியிருக்கும் குடியிருப்புகள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனால் மத்தியக் கிழக்கில் போர் பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. (நி)

# பங்களாதேஷ் கலவரத்தில் 32 சிறுவர்கள் உயிரிழப்பு

## யுனிசெப் தகவல்




(டாக்கா)

பங்களாதேஷில் அண்மையில் பொலிஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் குறைந்தது முப்பத்து இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் போராட்டம் இடம்பெற்ற இடங்களை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் உயிரிழந்த குழந்தைகள் ஐந்து வயது நிரம்பாதவர்கள் எனவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு, அரசு நிர்ணயித்த இட ஒதுக்கீடு முறை குறைக்கப்பட்டது, ஆனால் மாணவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், உயிரிழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், பொலிஸ் காவலில் உள்ளவர்களுக்கும் நீதி வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பங்களாதேஷில் கடந்த சில நாட்களாக நடைபெற்ற போராட்டங்களில் 266 பேர் உயிரிழந்ததோடு 7,000இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடா விரையும் அமெரிக்க போர்க் கப்பல்கள்!

**(டெஹ்ரான்)**

**இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அமெரிக்கா தனது ஜெட், போர் விமானங்கள் மற்றும் போர்க்கப்பல்களை வளைகுடா நோக்கி அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

டெஹ்ரானில் ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக இஸ்ரேல் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், பதிலடி வழங்கும் அச்சநிலையும் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, இஸ்ரேலின் பாதுகாப்பிற்கான ஆதரவை அதிகரிக்க அமெரிக்கா குறித்த நகர்வை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்க இராணுவத் தலைமையகம் பெண்டகன் தெரிவித்துள்ளது.



ஹமாஸ் தலைவர் ஹனியே மற்றும் ஹிஸ்புல்லா இராணுவ தளபதி ஃபுவாட் ஷுக்ர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் முதன்முறையாக ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா இஸ்ரேலுக்கு எதிரான தனது எதிர்ப்பு குரலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து லெபனான், ஏமன் மற்றும் ஜோர்தான் உட்பட, மத்திய கிழக்கு முழுவதும் இஸ்ரேல் மீது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

எனவே, ஷுக்ரைக் கொன்றதன் மூலம் ஒரு புதிய போர் ஆரம்பமாகியுள்ளது என ஹசன் கூறியமை சர்வதேசத்தை அச்ச நிலைக்கு தள்ளியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் பிரதமர், "தமது நாடு எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறது" என திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (நி)

## சோமாலியாவில் தற்கொலைத்தாக்குதல் 32 பேர் உயிரிழப்பு; பலர் காயம்



(மொகாஷா)

சோமாலியாவில் இடம் பெற்ற தற்கொலை கார் குண்டுத் தாக்குதலில் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர். சோமாலிய தலைநகர் மொகாடிசு பகுதியில் இன்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது

சோமாலிய தலைநகரில் கடற்கரையோரத்தை அண்மித்து மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தாக்குதலில் சுமார் 63 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளமையினால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அச்சம்வெளியிடப்பட்டுள்ளது.

சோமாலியாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அல்-ஷபாப் போராளிகள் தொடர் தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றனர்

இந்த நிலையில் அல்-ஷபாப் கிளர்ச்சியாளர்களினால் குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்க கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது

சோமாலியாவில் அல்-ஷபாப் கிளர்ச்சியாளர் குழு அல்-கொய்தா அமைப்புடன் இணைந்து சுமார் 20 ஆண்டுகளாக கொடூரமான தாக்குதல்களை முன்னெடுத்துவருவதாகச் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (நி)

## படையெடுக்கும் வெளிநாட்டவர்கள் கட்டுப்பாடுகளை கடுமையாக்கும் பாலி



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் பாலி நகரத்திற்கு குடியேற்ற கட்டுப்பாடுகளை கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் பாலிக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளதனால் இந்தோனேசியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஆண்டின் முதல் 7 மாதத்தில் பாலிக்குப் போன சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கை 3.89 மில்லியனானது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் இது ஒரு மில்லியனுக்கு அதிகமாகும். அதற்கமைய, இனிமேல் கடவுச்சீட்டு விசா அனுமதி, குடியிருப்பு அனுமதி முதலியவை தீவிரமாகச் சோதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சோதனையில் முக-அடையாள தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படுகிறது. பாலியின் Ngurah Rai அனைத்துலக விமான நிலையத்திற்குச் செல்லும் வெளிநாட்டவர்கள் அனைவருக்கும் அது பொருந்தும் என குறிப்பிடப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் படுகொலை 18 ஆண்டுகள் நிறைவு

(மட்டக்களப்பு)

மூதூரில் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் அக்ஷன் பாம் என்ற நிறுவனத்தில் பணியாற்றிய 17 பேர் உயிரிழந்து நேற்றுடன் 18 வருடங்களாகின்றன.

இந்நிலையில், தங்களுடைய உறவுகள் படுகொலை செய்யப்பட்டதற்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

2006 ஜூலை மாதம் 31ஆம் திகதி வழமை போல் கடமையின் நிமித்தம் மூதூரில் உள்ள அலுவலகத்துக்குச் சென்றிருந்த இப்பணியாளர்கள் மூதூர் பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருந்த சந்தர்ப்பத்தில் 2006 ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 17 உள்ளூர் பணியாளர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது (நி)

# வெள்ளை ஈ தாக்கம் கட்டுப்படுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

தெங்கு மற்றும் செவ்விளநீர் உற்பத்திகளில் பரவி வரும் வெள்ளை ஈ பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக விவசாயத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட என்கார்சிஸ் குவாடலூபே அடங்கிய 3 இலட்சம் பொதிகள் இவ்வருடம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வெள்ளை ஈ தாக்கத்தால் ஏற்பட்ட சேதம் தற்போது பெய்து வரும் மழை காரணமாக ஓரளவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை ஈ மஞ்சள் நிறத்தில் அதிகம் ஈர்க்கப்படுவதால், தென்னையை விட செவ்விளநீர் உற்பத்திகளுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது.

வெள்ளை ஈ தாக்கத்தால் சேதத்துக்குள்ளான 10 இலட்சத்து 51 ஆயிரத்து 323 தென்னை மற்றும் செவ்விளநீர் மரங்கள் பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 500 | 500 |
| தக்காளி | 350 | 300 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 |
| கோவா | 400 | 450 | 400 | 500 |
| கரட் | 400 | 450 | 450 | 500 |
| பூசணி | 200 | 180 | 280 | 200 |
| புடோல் | 200 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 700 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 250 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 650 | 1200 | 500 | 600 |
| லீக்ஸ் | 550 | 650 | 500 | 400 |
| பீற்றூட் | 400 | 400 | 300 | 500 |
| கறிமிளகாய் | 800 | 900 | 1200 | 1000 |
| முருங்கைக்காய் | 150 | 400 | 200 | 200 |
| போஞ்சி | 600 | 700 | 600 | 800 |
| கத்தரி தம்புள்ள | 200 | 200 | 150 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 50 | 80 |
| தேசிக்காய் | 800 | 700 | 700 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 80-120 |
| இராசவள்ளி | 600 | 450 | 700 | 700 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 300 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 120 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 40 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 60 | 50 |

## இன்று ஒரு தகவல் 203



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# கொட்டாவி

நீங்கள் சிரித்தால் இந்த உலகமும் சிரிக்கும் என்று சொல்லுவது வழக்கம். அதே மாதிரி இன்னொன்றும் சொல்லலாம் நீங்கள் கொட்டாவி விட்டால் இந்த உலகமும் கொட்டாவி விடுமாம் சார். இது உண்மை தான். இது ஒரு தொற்று வியாதி தான். ஒருவர் வாயை திறப்பதைப் பார்த்துத் தான் உடனே நமக்கும் ஒரு உந்துதல் வந்து விடும். கொட்டாவி விடுகிறோம்.

இந்தக் கொட்டாவியைப் பற்றி நினைத்தாலே கொட்டாவி வந்து விடுகிறது என்கிறார் ஒரு ஆராய்சியாளர். அவர் பெயர் Dr.Provine அவர் தன்னுடைய ஆராய்சிக்கு என்று எடுத்துக் கொண்ட விடயம் கொட்டாவி. கொட்டாவியைப் பற்றி படித்தால் கூட வந்து விடும் என்கிறார். ஒரு கூட்டத்திலே பல பேரிடம் கொட்டாவி சம்பந்தமான விடயத்தை கொடுத்து படிக்கச் சொல்லி இருக்கிறார். அப்படி படிக்கும் போது 75 சதவீதம் பேர் கொட்டாவி விட்டார்களாம். மற்ற விடயத்தை படிக்கும் போது 20 சதவீத பேர் தான் கொட்டாவி விட்டார்களாம். இந்தத் தகவலை கேட்கும் போது எத்தனை பேர் கொட்டாவி விடுகின்றீர்களோ? யாருக்கு தெரியும். இது ஒரு வினோதமான செய்கையாக தான் இருக்கிறது.

இது பற்றி முழு விபரமும் இன்னமும் நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏன் என்றால் இதை பற்றிய ஆராய்ச்சியே மிகவும் குறைவு. எத்தனையோ முக்கியமான விடயங்கள் இருக்கும் போது இதைப்பற்றி யார் இவ்வளவு அக்கறையாக ஆராய்ச்சி செய்ய போகின்றார்கள். இருந்தாலும் ஒரு சில பேர் இதிலே மிகவும் மும்முரமாக இருக்கிறார்கள்.Dr. provine மாதிரி பொதுவாக கொட்டாவி பற்றி இது வரைக்கும் எல்லோரும் நம்பி கொண்டு இருப்பது என்ன தெரியுமா? இரத்தத்திலே ஒட்சிசனை அதிகப்படுத்துவதற்கோ அல்லது இரத்தத்திலே இருந்து அதிகப்படியான கார்பன் டை ஒட்சைட்டை வெளியேற்றுவதற்கு உண்டான ஒரு சுவாசப்பயிற்சி தான் கொட்டாவி.

இப்படி தான் எல்லோரும் நினைக்கிறார்கள். அது கொஞ்சம் பொருத்தமாகவும் தெரிகிறது. ஆனால் Dr. provine உம் இன்னொருவரும் இதைப்பற்றி சில சோதனை எல்லாம் செய்து பார்த்துவிட்டு இந்தக்கருத்து இவ்வளவு சரியாக தெரியவில்லை என்று சொல்லி விட்டார்கள். ஏன் என்றால் சுத்தமான ஒட்சிசனை சில பேர் சுவாசிக்கின்ற மாதிரி செய்து பார்த்தார்கள். அவர்கள் எல்லாம் கூட அதிகமாக கொட்டாவி விடுகிறார்களாம். அப்படி என்றால் ஒட்சிசன் தேவைக்காக அவர்கள் கொட்டாவி விடுகிறார்கள் என்று நினைப்பது தப்பு தானே மனிதன் பிறந்து 5 நிமிடத்திலும் இதை ஆரம்பித்து விட்டான்.

அது மட்டுமா? மிருகம், பறவை, மீன்கள் எல்லாம் கூட கொட்டாவி விடும். மனிதன் விடும் கொட்டாவியும் மாடு விடும் கொட்டாவியும் ஒன்றா?அது ஒரு முக்கியமான கேள்வி. தூண்டுதல் உணர்வு குறைவாக இருக்கும் போது மனிதன்கொட்டாவி விடுகிறான். முக்கியமான ஒன்று நடக்கப் போகிறது என்கிற எதிர்பார்ப்பிலே மிருகங்கள் கொட்டாவி விடும். மிருகங்களை பொறுத்த வரைக்கும் இது உறுதியாக தெரிகிறது எப்படி என்றால். அது எல்லாம் கொட்டாவி விடும் போது இதயத்துடிப்பு அதிகமாகிறது.

இரத்த அழுத்தம் அதிகமாகிறது! இது அந்த மிருகத்தை செயற்பட தயார் நிலைக்கு கொண்டு வந்து விடும். மனிதன் எப்படி என்றால் சாவகாசமான சூழ்நிலையிலே கொட்டாவி விடுகின்றான். இப்போது உதாரணத்திற்கு ஒருவர் கூட்டம் குறைவாக உள்ள ரயிலிலே நேரம் கழித்து வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றார். அந்த சமயத்திலே வாயைத் திறப்பார்.

சிங்கம் எப்படி தெரியுமா? சாப்பாட்டு நேரம் நெருங்குகின்றபோது கொட்டாவி விடும். Siammese fighting fish எப்படி என்றால் அது தனியாக இருக்கின்ற போது கொட்டாவி விடுவதில்லை. கூட்டமாக இருக்கின்ற போது கொட்டாவி விடும். தூண்டுதல் உணர்வு குறைவினாலே கொட்டாவி விடுகின்றோம். என்பது ஒரு கருத்து. அதே மாதிரி இன்னொரு கருத்து. முழித்துக் கொண்டிருக்கின்றோம் என்கின்ற சூழ்சிலையிலே ஒரு உந்துதலை கொடுப்பதற்காக உடம்பு செய்கின்ற உதவி கொட்டாவி. அதற்கு உதாரணம். படுக்கையிலே இருக்கின்றவர்கள் கொட்டாவி விடுவது குறைவு. ஆனால் அதே நேரத்திலே நடுராத்திரி தாண்டி கார் ஓட்டுகின்றவர்கள் அதிகமாக கொட்டாவி விடுகின்றார்கள்.

இந்த கருத்திலேயும் ஒரு குழப்பம் இருக்கின்றது. எப்படி என்றால் ஏற்கனவே தயார் நிலையிலே இருக்கின்றவர்களுக்கும் கொட்டாவி வருகின்றதாம். உதாரணம் பரீட்சை எழுத உட்கார்ந்த சில பிள்ளைகளுக்கு கொட்டாவி தான் முதலிலே வருகின்றது. அதற்குப்பின்பு தான் விடை வருகின்றது.

ஆகையினாலே கொட்டாவியைப்பற்றி இது தான் உண்மை என்று உடல் ரீதியான ஒரு விளக்கத்தை இன்னமும் கொடுக்க முடியவில்லை. ஏன் என்றால் அது எந்த நேரத்திலேயும் வரும் என்று உறுதியாக சொல்லமுடியாது சார் என்றார். அடிக்கடி கொட்டாவி வருகின்றது என்று சொல்லிக் கொண்டு ஒருவர் டாக்டரிடம் போனார். அவர் இவரை நாற்காலியிலே உட்காரவைத்து வாயைத் திற என்றார். இவர் திறந்தார். இதோ கொஞ்சம் மருந்தை திறந்து வாயிலே போட்டு மூடிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். கொஞ்ச நேரம் கழித்து திரும்பி வந்தார். இவர் திறந்த வாயை மூடவே இல்லை. இன்னும் அகலமாகதிறந்து கொண்டார். ஏன் சார் பெரிய கொட்டாவியா வருதா என்று கேட்டார் டாக்டர். இவர் மிகவும் சிரமப்பட்டு வாயை அசைத்து பதில் சொன்னார். கொட்டாவி எப்போதோ போய்விட்டது. இப்போது நான் வாயை திறந்தது உங்கள் கையிலே இருக்கின்ற பில்லை பார்த்துவிட்டு என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓகஸ்ட் மாத இராசி பலன்கள்-2024

## எப்போதும் தர்ம நிலையுடன் காணப்படும் துலாம் இராசியினரே




கிரகநிலை - பஞ்சம ஸ்தானத்தில் சனி (வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் ராகு - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய், குரு - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 01-08-2024 அன்று சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16-08-2024 அன்று சூரியன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று சுக்கிரன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.26.08.2024 செவ்வாய் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 31.08.2024 அன்று புதன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் அவசரப்படாமல் நிதானமாக எதையும் செய்தால் வெற்றி நிச்சயம். இந்த மாதம் ராசிநாதன் சுக்கிரன் அஷ்டமஸ்தானத்தில் மறைந்திருந்தாலும் ஆட்சியாக இருப்பது நல்ல பலன்களைத் தரும். ராசியை சூரியன் பார்க்கிறார். எதிர்ப்புகள் விலகும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள்.

தொழில் வியாபாரம் தொடர்பாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரம் தொடர்பான வழக்கு விவகாரங்களை தள்ளி போடுவது நல்லது. எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் பணத்தேவை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். மேலதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். குடும்பத்தில் ஏதாவது வீண் விவகாரங்கள் ஏற்பட்டு நீங்கும்.

கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை உண்டாகலாம். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். பிள்ளைகளுக்காக கூடுதலாக பாடுபட வேண்டி இருக்கும். சகோதரர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. பெண்களுக்கு பணவரவு கூடும். ஏற்கனவே செய்த ஒரு காரியத்தின் பலன் இப்போது கிடைக்கும். திடீர் மனவருத்தம் ஏற்படலாம். கலைத்துறையினர் மற்றவர்களுக்கு உதவப்போய் வீண் பிரச்சினை உண்டாகலாம். கவனம் தேவை.

வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கையாக செல்வது நல்லது. அரசியல் துறையினருக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும். மன துயரம் நீங்கும். சிற்றின்ப செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம். கவனமாக இருப்பது நல்லது. மாணவர்களுக்கு எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்ல பலன் தரும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அடுத்தவர்களிடம் பேசும் போது யாரைப் பற்றியும் விமர்சிக்காமல் இருப்பது நல்லது. பணவரவில் தாமதம் இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் பின் தங்கிய நிலை மாற கூடுதல் கவனத்துடன் அதிக நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது அவசியம்.

**சுவாதி:** இந்த மாதம் பணவரவு கூடும். ஆன்மிக செலவுகள் உண்டாகும். காரியத்தடை, தாமதம் விலகும். ஆனாலும் அந்த காரியத்தை செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அந்நிய மொழி பேசுபவர்களால் உதவி கிடைக்கும். வசிக்கும் இடத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும்.



**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் முனனேற தேவையான வாய்ப்பு கிடைக்கும். தொழில் போட்டிகள் விலகும். தேவையான நிதியுதவி கிடைக்கக் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக பணிகளை கவனித்தாலும் அலுவலக வேலைகளில் தாமதம் இருக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும்.

**பரிகாரம்:** மஹாலக்ஷ்மியை வணங்க குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபிட்சம் உண்டாகும். **அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு வியாழன், வெள்ளி. **சந்திராஷ்டம தினங்கள்:** 26, 27. **அதிஷ்ட தினங்கள்:** 20, 21.

## தனது நேர்மையால் வாழ்வில் வெற்றி பெறும் விருச்சிக இராசியினரே




கிரகநிலை - சுக ஸ்தானத்தில் சனி (வ) - பஞ்சம ஸ்தானத்தில் ராகு - களத்திர ஸ்தானத்தில் செவ்வாய், குரு - அஷ்டம ஸ்தானத்தில் சந்திரன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - லாப ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.கிரகமாற்றங்கள்: 01-08-2024 அன்று சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.08.2024 அன்று சூரியன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று செவ்வாய் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.31.08.2024 அன்று புதன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் வரவுக்கு ஏற்ற செலவு இருக்கும். சில தடைகள் ஏற்பட்டாலும் சாதகமான பலன் வரும். விரும்பியது கிடைக்கும். அதே நேரத்தில் அதற்காக கூடுதலாக முயற்சிகள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். மனதில் ஏதாவது ஒரு கவலை இருக்கும். வாய்க்கு ருசியான உணவு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண் செலவு ஏற்படும்.

தொழில் வியாபாரத்தில் லாபம் குறையும். பணவரவு சீராக இருக்கும். ஓடர்கள் வருவது தாமதப்படும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது. போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படும். சக ஊழியர்களிடம் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். மேலதிகாரிகள் சொன்ன வேலையை செய்து முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குடும்பத்தில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத் துணையின் பேச்சை கேட்டு செயற்பட வேண்டி இருக்கும்.

கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள், நண்பர்கள் மூலம் கிடைக்கும் உதவி தாமதப்படும். பெண்கள் கூடுதலாக செய்யும் முயற்சிகள் மூலம் விரும்பியபடி காரியத்தை செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழிலில் திடீர் போட்டி இருக்கும். வீண் வார்த்தைகளை பேசுவதை தவிர்ப்பது நல்லது.

மன நிறைவடைவதற்காக கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அரசியல்துறையினருக்கு அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. எடுத்துக் கொண்ட வேலைகளில் ஏதாவது வேண்டாத பிரச்சினை தலை தூக்கலாம். மாணவர்கள் எதிலும் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது நல்லது. கல்வியில் வெற்றிபெற கூடுதல் கவனம் தேவை.

விசாகம் 4ஆம் பாதம்: இந்த மாதம் குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு செயற்படுவார்கள். பிள்ளைகள் மூலம் பெருமை உண்டாகும். புத்தி சாதூரியத்தால் பொருட்சேர்க்கை ஏற்படும். தாய்வழி உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**அனுஷம்:** இந்த மாதம் தடைபட்ட காரியங்களில் தடை நீங்கும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடை விலகும். தேவையான பண உதவி



கிடைக்கும்.

**கேட்டை:** இந்த மாதம் பொருளாதார சிக்கல் ஏற்பட்டு நீங்கும். எந்த ஒரு காரியத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாத குழப்பம் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சொன்ன சொல்லை காப்பாற்றி விடுவீர்கள். அதனால் மதிப்பு கூடும். எதிர்ப்புகளை சமாளித்து முன்னேற எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

**பரிகாரம்:** கந்தசஷ்டி கவசம் சொல்லி முருகனை வணங்க எதிர்ப்புகள் நீங்கும். கஷ்டங்கள் குறையும் ; **அதிஷ்ட கிழமைகள்:** செவ்வாய், வெள்ளி ; **சந்திராஷ்டம தினங்கள்:** 1, 2, 28, 29, 30 ; **அதிஷ்ட தினங்கள்:** 22, 23 ;

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 549





அருகில் நெருங்கிச் சென்று சிறிது நேரம் கேட்ட பின்னர் விடயம் இன்னதென்று தெரிந்தது. பிக்குக்களிடம் பேசிக் கொண்டிருந்தவன் பார்த்திபேந்திரனுடைய கப்பலிலே இருந்த மாலுமிகளில் ஒருவன். கப்பல் முதல் நாள் இரவு நாகைப்பட்டினத்துக்கு வந்துவிட்டது.

மாலுமிகள் கரையில் இறங்கியதுமே இளவரசரைக் கடல் கொண்டு விட்டது என்ற செய்தியைச் சிலரிடம் சொல்ல அது நகரமெல்லாம் பரவி விட்டது. அச்செய்தி உண்மை தானா என்று அறிய அதி காலையில் அம்மாலுமிகளில் ஒருவனைச் சூடாமணி விஹாரத்தின் பிரதம பிக்கு அழைத்து வரச் செய்தார். அவன் தான் அறிந்ததை அறிந்தபடி கூறினான், "சுழற்காற்று அடித்த போது இளவரசர் கடலிலே குதித்தவர் திரும்பி வரவேயில்லை" என்று துயரக் குரலிலே சொன்னான்.

அப்போது அக்கூட்டத்திலே விம்மி அழும் குரல்கள் பல எழுந்தன. பிரதம பிக்குவின் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பெருகித் தாரை தாரையாக வழிந்தது. அவர் குனிந்த தலை நிமிராமல் படிகளில் ஏறிச் சென்று சைத்தியத்தைத் தாண்டி விஹாரத்துக்குள் பிரவேசித்தார். மற்ற பிக்குக்களும் அவரைத் தொடர்ந்து சென்றார்கள். சேந்தன் அமுதனும் அவர்களோடு வந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை.

பிரதம பிக்கு மற்றவர்களைப் பார்த்துச் சொன்னார்:- "புத்த பகவானின் கருணை இப்படியா இருந்தது? பற்பல மனக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தேனே? சக்கரவர்த்தியைப் பார்க்கச் சமீபத்திலே தஞ்சாவூருக்குப் போயிருந்தேன் பாருங்கள்! அச்சமயம் இலங்கையில் அருள்மொழிவர்மரின் அற்புதச் செயல்களைப்பற்றிக் கூறினேன்.

அதையெல்லாம் இளைய பிராட்டி குந்தவை தேவியும் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு என்னைத் தனியாக வரவழைத்து இந்த விஹாரத்தையொட்டி ஆதுரசாலை ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று அதற்குத் தேவையான நிபந்தங்கள் அளிப்பதாகவும் கூறினார். அது மட்டுமா? 'ஆச்சாரியாரே! நாட்டில் பலவாறு பேச்சுக்கள் நடந்து கொண்டிருப்பதைக் கேட்டிருப்பீர்கள்.

ஒருவேளை இளவரசர் சூடாமணி விஹாரத்தில் சில நாள் விருந்தாளியாக இருக்கும்படி நேரும். அவரை வைத்துப் பாதுகாக்க முடியுமா?' என்று குந்தவை பிராட்டி கேட்டார். 'தேவி! அத்தகைய பேறு எங்களுக்குக் கிடைத்தால் கண்ணை இமை காப்பதுபோல் வைத்துப் பாதுகாப்போம்' என்று கூறினேன். என்ன பயன்! இளவரசரா கடலில் முழுகினார்? இந்த நாட்டிலுள்ள நல்லவர்களின் மனோரதமெல்லாம் முழுகிவிட்டது! சோழ சாம்ராஜ்யமே முழுகிவிட்டது. சமுத்திரராஜன் இவ்வளவு பெருங்கொடுமையைச் செய்ய எப்படித் துணிந்தான்? அக்கொடியவனைக் கேட்பார் இல்லையா?"

மற்ற பிக்குக்கள் அனைவரும் மௌனமாகக் கண்ணீர் பெருக்கினார்கள். தலைமைப் பிக்கு பேசி நிறுத்தியதும் சிறிது நேரம் அங்கே மௌனம் குடி கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் அதுதான் சமயம் என்று புத்த பிக்குக்களிடையே புகுந்து ஆச்சாரியரை அணுக யத்தனித்தான்.

உடனே அவனைப் பலர் தடுத்தார்கள். "இவன் யார்? இங்கே எப்படி வந்தான்?" என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

"ஐயா அடியேன் பெயர் சேந்தன் அமுதன்! தஞ்சையைச் சேர்ந்தவன். உங்கள் தலைவரிடம் ஒரு விடயம் சொல்ல வேண்டும்!" என்றான்.

"சொல், சொல்!" என்றார்கள் பலர்.

அவனுடைய தயக்கத்தைப் பார்த்துவிட்டு ஆச்சாரியர், "இவர்களுக்குத் தெரியக் கூடாத ரகசியம் ஒன்றுமில்லை சொல்" என்றார்.


"ஐயா! நோயாளி ஒருவரை அழைத்து வந்திருக்கிறேன்!"

"அது யார் நோயாளி? என்ன நோய்? எங்கே விட்டிருக்கிறாய்?"

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## அலுத்துக்கொண்ட முயல்கள்



குளத்தை நோக்கி வேகமாக படையெடுக்க செடி கொடிகள் அசைய, அந்த இடமே பயங்கர சத்தத்துடன் அதிர ஆரம்பித்து.

குளத்தின் அருகில் கூட்டமாக பேசி கொண்டிருந்த தவளைகள் ஏதோ பயங்கரமான விலங்கு கூட்டம் வருகிறது போல என பயந்து வேடிக்கை பார்த்து கொண்டிருக்க, முயல் கூட்டத்தின் இந்த செயல் அங்கிருந்து சின்ன சின்ன உயிரினங்கள் அனைத்தையும் பயந்து தலை தெறிக்க ஓட வைத்தது. கூட்டமாக பேசி கொண்டிருந்த தவளைகள் குளத்தில் வேகமாக குதிக்க ஆரம்பித்தன.

இதனால் குளத்தில் இருந்த மீன்கள் வேகமாக ஆழமான இடத்திற்கு சென்றன. இதை பார்த்த முயல் கூட்டத்தின் தலைவன் ஒரு நிமிடம் அதிர்ச்சி ஆகினான்.

தனது கூட்டத்தை ஒரு நொடி நிற்க சொன்னான். குளத்தின் அருகில் இருந்த சிறு உயிரினங்கள் உயிரை கையில் பிடித்து கொண்டு ஓடியதை தாங்கள் போலவே இருந்ததை உணர்ந்தது.

தனது கூட்டத்திடம், நாம் எந்த உயிருக்கும் இதுவரை பாதிப்பை ஏற்படுத்தியது இல்லை. ஆனாலும் அவை நம்மை பார்த்து பயப்பட ஆரம்பித்தன. ஆக இது தான் வாழ்க்கை. இதை வாழ நாம் அன்றாடம் ஓடியாக வேண்டும். நாம் மட்டுமில்லை இங்கு வாழும் அனைவருமே ஓடியாக வேண்டும்.

அப்படியென்றால் இருக்கும் இந்த நொடியை நாம் அனுபவித்து சந்தோசமாக வாழ வேண்டும் என்று தலைவர் கூறியதும் முயல்களுக்கு தாங்கள் தவறான முடிவை எடுத்தது புரிந்தது.

அது போல இறப்பு எதற்கும் தீர்வு கிடையாது என்பதையும் புரிந்து கொண்டன.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையால் சுத்திகரிக்கப்பட்ட மனச்சாட்சியே, அனைத்திலும் மதிப்பு வாய்ந்த பொக்கிஷமாகும்.
~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீங்கள் எதைத் தருவீர்கள் தமிழ் மக்களிடம் கூறுங்கள்

காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்துடன் 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்மிடம் கூறியதாக, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்த வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்கவில்லை.

பரவாயில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளில் தீர்வுத்திட்டம் பற்றிச் சிந்திக்கவில்லை என்பதற்காகத் தொடர்ந்தும் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிச் சிந்திக்கமாட்டார் என அனுமானிப்பது தவறானது.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் எனக் கூறுபவர்கள் எத்தகைய தீர்வை முன்வைப்போம் என்பதை தமிழ் மக்கள் முன்னிலையில் கூற வேண்டும். அதேநேரம் இனப் பிரச்சினைக்காக அமுல்படுத்தவுள்ள தீர்வுத்திட்டம் பற்றி தமிழ் மக்களிடம் முன்வைத்த விடயத்தை எந்த மாற்றமும் திருத்தமும் இல்லாமல், சிங்கள மக்களிடமும் முன்வைக்க வேண்டும்.

இதைவிடுத்து, காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் உட்பட 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவேன் என தமிழ் மக்களிடமும் சிங்கள மக்களிடமும் கூறாமல், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரிடம் மட்டும் கூறுவது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

ஏனெனில் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இரகசியமாகச் செய்யக்கூடியதல்ல.

தவிர, தமிழ் மக்களுக்கு காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் தருவேன் என வெளிப்படையாகக் கூறினால், அதை சிங்கள மக்கள் விரும்பமாட்டார்கள். அவ்வாறானதொரு நிலைமை தெற்கில் ஏற்பட்டால், சிங்கள மக்கள் எனக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதான விளக்கத்தை ஜனாதிபதி வேட்பாளர்கள் முன்வைக்கலாம்.

ஆனால் அத்தகையதொரு விளக்கம் நேர்மைத்தன்மையற்றது. தெற்கில் எதிர்ப்பு ஏற்படும் எனக் கூறி, தமிழ் மக்களை ஏமாற்ற நினைப்பது.

உண்மையைக் கூறப்போனால், சிங்கள மக்களின் எதிர்ப்பு இருக்குமாயின், இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியமாகாது.

அதாவது சிங்கள மக்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் தமிழ் மக்களுக்கு உரிமைகளைத் தருவதற்கு சிங்களத் தலைவர்கள் இன்னும் பிறக்கவில்லை.

ஆகையால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற சிங்கள வேட்பாளர்கள் தமிழ் மக்களுக்கான தங்களின் தீர்வுத்திட்டம் என்ன என்பதை பகிரங்கமாக ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும்.

# 13 தொடர்பில் கேள்வியெழுப்புவோரிடம் அபிவிருத்தி தொடர்பில் திட்டமேதுமில்லை

## ஜனாதிபதி ரணில் விசனம்

அதிகாரப் பரவலாக்கம் குறித்தும் 13 ஆம் திருத்தம் தொடர்பாகவும் கேள்வி எழுப்பும் தரப்பினரிடம், வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்த தீர்வுத் திட்டங்கள் ஏதுவும் இருக்கின்றதா? என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன் போது கருத்துரைத்த அவர்,

13 ஆம் திருத்தம் தொடர்பாகவும் அதிகாரப் பரவலாக்கல் குறித்தும்பலர் என்னிடம் வினவியிருந்தனர். நான் இந்த இடத்தில் ஒரு கேள்வியை முன்வைக்கின்றேன்.

இன்று வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக அனைவரினதும் நிலைப்பாடு என்ன? நான் 13 தொடர்பில் அரசியலமைப்பில் உள்ள விடயங்களையும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவுமே பேசியிருந்தேன்.

அத்துடன், எதிர்வரும் 10 வருடங்களுக்குள் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். எனவே நாம் அடுத்த படியாகப் பொருளாதார யுத்தத்தை எதிர்கொள்வதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ந-7)

# நாட்டின் வளமான எதிர்காலத்துக்கு ரணில் ஜனாதிபதியாக தொடரவேண்டும்

## வஜிர எம்.பி எடுத்துரைப்பு

ஜனாதிபதியின் பொருளாதார வேலைத் திட்டங்கள் இன்னும் நிறைவுக்கு வரவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2022 ஆம் ஆண்டு இந்த நாடு எதிர்நோக்கிய நெருக்கடியை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். ஏனெனில் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பின்விளைவுகளை மக்களே சுமக்க வேண்டி ஏற்பட்டது.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டைப் பொறுப்பேற்று 2 வருடங்களில் மக்கள் எதிர்கொண்ட சுமைகளில் இருந்து அவர்களை விடுவித்துள்ளார்.

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டங்கள் இன்னும் நிறைவுக்கு வரவில்லை.

ஆனால் நாடு சுமூக நிலையை அடைந்துள்ளது. இந்த நாட்டில் 4 ஆவது உள்நாட்டு யுத்தம் ஏற்படுவதற்கு அரசியல் பிரதிநிதிகள் பலர் வழிவகை செய்கின்றனர்.

எனவே ஜனாதிபதி ரணில் இந்த நாட்டில் தொடர்ந்தும் ஆட்சியமைக்கும் பட்சத்தில் வளமான எதிர்காலம் உருவாக்கப்படும்.

சவாலுக்கு மத்தியில் நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி இன்று உலக நாடுகளின் வரவேற்பையும் பெற்றுள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர

## அறிமுகக் கூட்டத்தில் உறுதி

மௌபிம ஜனதாக் கட்சியின் தலைவரும் தொழிலதிபருமான திலித் ஜயவீர சர்வஜன பலய கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சர்வஜன பலய கூட்டணியின் மாநாடு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்றது.

நேற்றைய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஜனாதிபதி வேட்பாளராக தொழிலதிபர் திலித் ஜயவீர களமிறங்குவதாக இதன் போது அறிவித்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய திலித் ஜயவீர,

நாட்டு மக்களின் நம்பிக்கையை நாம் எப்போதும் காப்பாற்றுவோம். மக்களின் அபிலாஷைகளை நாம் பூர்த்தி செய்வோம்.

இனமத வேறுபாடின்றி நாம் நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வோம். இன்று இந்த நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து வங்குரோத்து நிலையில் உள்ளது.

நான் ஒரு தொழிலதிபராக இருந்த போதிலும் நான் மக்கள் தொடர்பாகவும் சிந்தித்தேன். கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கும் நாம் ஒத்துழைப்பு வழங்கினோம்.

ஆனால் அவர் சதித்திட்டத்தால் ஆட்சிக் கவிழ்ப்புக்கு உள்ளாக்கப்பட்டார். இன்று இந்த நாட்டில் ஊழல் ஆட்சி இடம்பெறுகின்றது.

ஊழல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டைக் கட்டியெழுப்பி அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்வதே எமது நோக்கமாகும் என்றார். (ந-7)

# ஒன்லைன் விசா தொடர்பில் இன்று இறுதி முடிவு

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒன்லைன் விசா வழங்கும் முறை தொடர்பில் இன்று முடிவு எடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இ விசா சேவையை வழங்க அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை அமுல்படுத்துவதைத்தடுக்கும்வகையில் உயர் நீதிமன்றம் சமீபத்தில் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இதன்படி, இம்மாதம் 2 ஆம் திகதி இரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒன்லைன் முறையின் ஊடாக விசா வழங்குவதை இடைநிறுத்துவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த இணையத் தளம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் ஊடாக வீசா பெற்றுக் கொள்வதற்காக பணம் செலுத்தியவர்களுக்கு அந்த பணத்தை மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது.


அதன்படி, இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு விமான நிலையத்தில் வழங்கப்படும் ON ARRIVAL விசாக்கள் மாத்திரமே வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# பேரா. சிவலிங்கராஜாவின் நூல் வெளியீடு இன்று

*(யாழ்ப்பாணம்)*

இலங்கைக்கான யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா எழுதிய யாழ்ப்பாணத்தில் இந்திய ஆசிரியர்களின் கல்விப் பணி என்ற நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் வெளியீடு இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் இடம் பெறும். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை

**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**01**

பல்வேறு குழப்பங்களுக்கிடையே இலங்கையின் 2024-ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட வர்த்தமானியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்படும் என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தற்போது வரை மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர, விஜயதாச ராஜபக்ஷ, சரத் பொன்சேகா ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

இவர்கள் தவிர பிரதான கட்சிகளான தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் அநுர குமார திஸாநாயக்கவும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பில் சஜித் பிரேமதாஸவும் போட்டியிடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மீண்டும் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உள்ளிட்ட ஒரு சில கட்சிகள் தங்களது வேட்பாளர் யார் என்பதை விரைவில் அறிவிக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழர் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது குறித்து தமிழ் தரப்பிற்கு இடையிலேயே மாறுப்பட்ட கருத்துக்கள் வெளியாகி வருகின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதை முன்னிலைப்படுத்தி, தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களுக்கு இடையில் உடன்படிக்கையொன்று ஜூலை 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கையில், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தமிழ் தேசிய கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) தமிழ் தேசிய பசுமை இயக்கம் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கையின் முக்கிய தமிழ் கட்சிகளான இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் பிரகாரம் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளை தெரிவு செய்வதற்காக இது வரை 8 தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதன்படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான முதலாவது தேர்தல் 1982 ஆம் ஆண்டு நடைபெற்றதுடன் இந்த தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் ஜி.ஜி. பொன்னம்பலம் போட்டியிட்டிருந்தார்.

1982 ஆம் ஆண்டுக்கு பின்னர் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலேயே தமிழ் வேட்பாளர் ஒருவர் களமிறங்கியிருந்தார்.

இதன்படி, சுயேட்சை வேட்பாளராக எம்.கே.சிவாஜிலிங்கம் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டிருந்தார்.

அதன்பின்னர், 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சுந்தரம் மகேந்திரன் போட்டியிட்டதுடன், இறுதியாக 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் சுப்ரமணியம் குணரத்னம் ஆகியோர் போட்டியிட்டிருந்தனர்.

இலங்கையில் இதற்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் வேட்பாளர்கள் சுயேட்சையாக களமிறங்கியிருந்த நிலையில், பொது வேட்பாளராக இன்று வரை எவரும் களமிறக்கப்படவில்லை.

இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டு நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் அந்த பொது வேட்பாளர் யார் என்பது குறித்து இதுவரை தகவல் வெளியிடப்படவில்லை.

இக் கட்டுரை எழுதி முடிக்கும் தருவாயில் (2024.07.26), 2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக நான்கு வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, ஓஷல ஹேரத் மற்றும் ஏ. எஸ். பி. லியனகே ஆகியோர் செலுத்தியுள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையும் வாக்களிப்பு வீதமும் அட்டவணை A யில் காட்டப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு 2024.02.01 அன்று தேர்தல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 17,063,343 பேர் ஆகும்.

**பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களும் வாக்களிப்பு வீதமும் அட்டவணை A**

| தேர்தல் ஆண்டு | வேட்பாளர் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட வாக்காளர் | | | வாக்களிப்பு வீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலங்கை | வடக்கு | கிழக்கு | இலங்கை | வடக்கு | கிழக்கு |
| 1982 | 6 | 8,145,015 | 612,798 | 510,394 | 81.06% | 49.2% | 74.7% |
| 1988 | 3 | 9,375,742 | 734,505 | 633,642 | 55.32% | 20.2% | 63.4% |
| 1994 | 6 | 10,937,279 | 775,063 | 757,993 | 70.52% | 7.5% | 67.8% |
| 1999 | 13 | 11,779,246 | 818,311 | 815,814 | 73.31% | 35.6% | 70.6% |
| 2005 | 13 | 13,327,160 | 952,324 | 953,936 | 73.73% | 9.9% | 62.4% |
| 2010 | 22 | 14,088,500 | 988,334 | 995,612 | 74.50% | 30.2% | 69.3% |
| 2015 | 19 | 15,044,490 | 782,297 | 1,087,776 | 81.52% | 68.3% | 75.1% |
| 2019 | 35 | 15,992,096 | 846,833 | 1,183,211 | 83.72% | 70.9% | 80.8% |
| 2024 | | 17,063,343 | 898,796 | 1,310,781 | | | |

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை**

1978 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பினூடாக இலங்கையின் ஆட்சிமுறையை மாற்றியமைத்து, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவரின் கீழ் நிர்வாகத்துறையைக் கொண்டு வரும் வகையில் புதிய அரசியலமைப்பை ஜே. ஆர். ஜெயவர்த்தன உருவாக்கியிருந்தார்.

இது வெஸ்ட் மினிஸ்டர் முறையிலிருந்து நீங்கி அமெரிக்க முறையையொத்த பலம் மிக்க ஜனாதிபதிமுறையை இலங்கையில் கொண்டு வரும் முயற்சியாக இருந்தது. ஆனால், ஜே.ஆர். ஜெயவர்த்தன இதனை முழுமையான அமெரிக்க மாதிரியில் வடிவமைக்கவில்லை. அவர் பிரதமர் என்ற பதவியும், அமைச்சரவை அமைச்சர்கள் என்ற பதவியும் தொடருமாறு இதனை வடிவமைத்தார்.

**தேர்தல் நடாத்தப்படவேண்டிய தினம் பற்றி ஜனாதிபதித் தேர்தல் சட்டம் (1981 இன் 15 ஆம் இலக்கம்)**

(அ), தேர்தல் ஆணைக்குழுவின் உத்தரவு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து "16 நாட்களுக்குக் குறையாத மற்றும் 21 நாட்களுக்கு மேற்படாத" வேட்புமனுச் செய்யும் தினமாகவும்,

(ஆ) வேட்புமனுத் தினத்திலிருந்து "நான்கு வாரங்களுக்குக் குறையாத மற்றும் ஆறு வாரங்களுக்கு மேற்படாத" தினமொன்றை தேர்தல் நடாத்தப்படும் தினமாக தேர்தல்கள் ஆணையாளரினால் விதிக்கப்படல் வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லை தாண்டிய...

ளது.

குறித்த மீனவர்கள் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டதுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மயிலிட்டி மீன்பிடி பரிசோதனை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ந-7)

## அரச பணியாளர்...

பிரசாரம் செய்வது கடுமையான குற்றமாகும் எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், அவ்வாறு செய்பவர்கள் 3 வருட சிறைத்தண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறையாத அபராதம் அல்லது இரண்டு தண்டனைகளும் விதிக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொண்டு வெளியாகியுள்ள இந்தச் சுற்றறிக்கையில் அரசியல் உரிமைகளை இழந்த அரச அதிகாரிகளுக்கும் கூட இந்த நடைமுறை பொருந்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-7)

## மத்தியின்...

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர்,

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி அரசாங்கம் ஆரம்பித்த வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னோக்கிக் கொண்டு செல்லாவிட்டால் நாடு மீண்டும் வரிசை யுகத்தை எதிர்நோக்க நேரிடும்.

நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும்.

இந்த ஒப்பந்தங்களை மாற்ற முயற்சிப்பதன் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நிதியுதவியை இழக்க நேரிடும்.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தங்களை மாற்றினால் பாதகமான விளைவுகள் ஏற்படும். 2035ஆம் ஆண்டுக்குள் இலங்கையை ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாக மாற்றும் நோக்கிலேயே பொருளாதாரப் பரிமாற்றச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். (ந-7)

## உறுமய...

நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் குறித்த வேலைத்திட்டங்களை மீள நடைமுறைப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதனால், உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டத்தினைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-7)

## அரசாங்கத்திடம்...

குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துரைத்ததாவது,

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் 134 வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி தற்போது தமக்கு 92 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே இருப்பதாகக் கூறுகிறார்.

அப்படியானால் அரசாங்கம் தற்போது தனிப்பெரும்பான்மையை இழந்துள்ளது. அதேநேரம் தற்போதைய அரசாங்கத்தின் ஆயுட்காலம் இன்னும் 46 நாட்களில் முடிவடையும் எனக் கூறிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரின் வெற்றியை உறுதிப்படுத்தும் கொள்கை அடித்தளத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதி மாபெரும் கூட்டணி உருவாகும் என்றார். (ந-7)

## சிங்கள வேட்...

துக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால் அவர் அந்த நம்பிக்கைக்கு துரோகம் இழைத்துவிட்டார். அதனால் இனியும் அவர் நல்லவர், நம்பிக்கைக்கு உரியவர் என்று சொல்ல முடியாது.

அதேநேரம் மற்ற வேட்பாளர்களில் யார் நல்லவர் என்று சொல்லமுடியாத நிலையே உள்ளது. அவர்களும் சிங்கள பௌத்த எண்ணத்தில் ஊறி இருப்பவர்கள்.

அதில் இருந்து வெளியே வரக் கூடியவர்களாக அவர்கள் இல்லை என்றார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி ஏதேனும் ஒரு காரணத்தால் தோல்வி அடையுமாக இருந்தால் அடுத்த கட்டமாக உங்கள் நடவடிக்கை என்ன? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்,

இதில் தோல்வி அடைவதற்கு இடமில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர், தேர்தலில் வெல்ல வேண்டும் என்று வரவில்லை. எங்கள் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்யவேண்டும் என்பதற்காகவே அவரை முன்னிலைப்படுத்துகிறோம். இதில் தோற்றுப்போக எதுவும் இல்லை.

தமிழ் மக்களின் ஐக்கியத்தை வெளிப்படுத்தி தமிழர்களின் அபிலாஷைகள் என்ன என்பதைத் தெரியப்படுத்தும் நிலையை நாம் உண்டாக்க முடியும். இதுதான் எங்கள் பலம் எங்கள் கணிப்பு எனப் பதிலளித்தார். (ந-7)

## பிரதம...

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னதாக தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராகச் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்து கடந்த மாதம் 24 ஆம் திகதியன்று உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப் பொலிஸ்மா அதிபர் அல்லது பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்தது.

இதனைத் தொடர்ந்து, பொலிஸ் மா அதிபர் தொடர்பான பிரச்சினைக்கு பிரதம நீதியரசர் மற்றும் சபாநாயகர் இடையில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிலையில் [illegible] பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (ந-7)

### விபத்தில் விரல்களை இழந்த
# பாலகனின் விரல்கள் மீளப் பொருத்திச் சாதனை

(கரணவாய்)

கடந்த 29ஆம் திகதியன்று கரணவாய் கிழக்கில் தனது தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை இடம்பெற்ற விபத்தில் தனது விரல்களினை இழந்த மூன்றரை வருட பாலகனின் விரல்கள் கொழும்பு புஞ்சிபொரலை நோனா குழந்தைகள் வைத்தியசாலையின் பெரு முயற்சியினால் மீளப் பொருத்தப்பட்டுள்ளது. (ந-7,60)


மஹஜன சம்பத
திகதி 2024.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 5555
C 9 6 9 5 4 2
அத சம்பத
C 9 5 4 2
சீட்டிழுப்பு இலக்கம் 130
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1585
G 21 25 69 81 G
Double Chance 75211

மெகா பவர்
திகதி 04/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1903
B 11 16 20 33 55
19128

லக்கி 7 VIP
திகதி 2024.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 0381
X 6 6 1 7 9 9 X

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3797
சீட்டிழுப்பு திகதி 04.08.2024
X 21 39 52 76
X
35623

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 0864
தனுசு 04 09 30 61 தனுசு
62892
22

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.08.2024 வெற்றி வாரம் 263 வர்ணம் பழுப்பு
ஆங்கில எழுத்து W
8 2 3 3 2 4
52886
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.22,952,300.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2529 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 04.08.2024 தினம் ஞாயிற
02 09 26 53 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.50,000,000,00
DLB

சனிதா
திகதி 2024.08.04 வெற்றி வாரம் 4690
30 44 67 74 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.67,370,990.00
54946
DLB

சசிரி
வெற்றி வாரம் 511
சீட்டிழுப்பு திகதி 2024.08.04
கபிலம்
06 44 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,284,720/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4241 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.08.04 தினம் ஞாயிற்றுக்கிழமை
05 17 43 49 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 3,000,000.00
179522
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 38 02 14 32 59
1705 மஞ்சள்
04.08.2024 ஞாயிற
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 537,056,166.60
DLB

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2355
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.56,010,185.60
ADA KOTIPATHI
14 35 52 65 A
564522
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (226)

076 825 7716 (ஆகாஸ்)

## பணியாளர் தேவை

சைவசமய நிறுவனம் ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை. G.C.E A/L படித்த கணனி அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு

076 132 5186

(1617)

## காணி, வீடு விற்க வாங்குவதற்கு

காணிகள், வீடுகள், வியாபார நிலையங்களை விற்பதற்கும், வாங்குவதற்கும் நம்பிக்கையான இடம்.

உங்களின் ஒரே தெரிவு

" Easy Real Estate "

076 742 4301, 075 710 9639
Whatsapp:- +00 94 75 710 9639

(1612)

# தேர்தலுக்கான அச்சிடல் செலவீனம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும் போது, இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சு செலவீனம் மூன்று மடங்கு அதிகரிக்கக்கூடும் என அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சுப் பணிகளுக்காக சுமார் 800 மில்லியன் ரூபாய் செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டின் நீளம் 27 அங்குலமாக இருந்தது.

இந்தமுறை வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், வாக்குச் சீட்டின் நீளம் அதிகரிக்குமாயின் அச்சிடும் செலவுகளும் அதிகரிக்கக்கூடும் எனவும் அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார். (ந-7)

## நல்லை மங்கையர்க்கரசியின் விழிநீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியர் திருமதி **கோமதி ஆனந்தராசா** அவர்களின் அன்பு மாமியார்

**செல்லக்குட்டி நாகம்மா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(1624)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
075 033 6759
(216)

## வளர்ப்பு நாயை உரிமை கோரவும்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் நல்லின வளர்ப்பு நாயொன்று தனது இடத்தை தவறவிட்டு தஞ்சம்டைந்துள்ளது.

உரிமையாளர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

075 719 0110

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0927)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241
(C-0927)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas- All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0927)

## மரண அறிவித்தல்



பிறப்பு 1959 . 04 . 27

இறப்பு 2024 . 08 . 03

### ஜெகதீஸ்வரன் நிர்மலா (நிம்மி)

**(இரட்ணாஸ் வைண்டிங் வேக்ஸ் உரிமையாளரின் மனைவி)**

'முருகனகம்', வாளித்தொழிற்சாலை வீதி, பளை வீமன்காமம் வடக்கு, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல 37/ 22. 1ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரன் நிர்மலா அவர்கள் 03.08.2024 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- கமலாதேவி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வீ.கே அன்னலிங்கம் மற்றும் இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெகதீஸ்வரன் (இரத்தினாஸ் வைண்டிங் வேக்ஸ்) அன்பு மனைவியும், சஞ்ஜீவன் (சட்டக் கல்லூரி முதலாம் தர மாணவன்), சோபிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், RDHS முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனராணி, சாந்தி, சிவபாலன், உமைபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகேஸ்வரன் (சுவிஸ்), அருளேஸ்வரன் (அன்னலிங்கம் அன்சன்ஸ் மன்னார்), இராஜேஸ்வரன் (இரட்ணாஸ் மோட்டோர்ஸ் கிளிநொச்சி), கிரிஜா, விமலேஸ்வரன் (அன்னலிங்கம் அன்சன்ஸ் மன்னார்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.08.2024) இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரது மாவிட்டபுர இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வாளித்தொழிற்சாலை வீதி,
பளை வீமன்காமம் வடக்கு,
மாவிட்டபுரம்.
(C-928)

தகவல்- குடும்பத்தினர்
077 071 1521 / 077 812 2304

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்ஷனின்

ஆடி மாத ஆடைத் தள்ளுபடி

- திருமணப் பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள் சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான
- ஆடைத் தெரிவுகள்...




இன்றும் நாளையும் மட்டுமே
(225)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.